**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 25.11.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 20 (LW27)

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.ஜெகதீசன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A1, A3, A4, A6, A7 ஆஜர். A2, A5 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2021ம் தேதியன்று கமுதி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது, மண்டல மாணிக்கம் காவல் நிலைய குற்ற எண்.139/2021, பிரிவுகள் 147, 148, 341, 321, 324, 427, 302 இதச வழக்கில் இறந்துபோன கருப்பையாவின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் பெற்று, காலை சுமார் 11.00 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். பிரேத பரிசோதனையின்போது கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:00 +0530

1) இடது கண்புருவத்திற்கு மேல் 5 x 3 x 2 செமீ அளவில் சிதைந்தகாயம்.

2) வலது கண்புருவத்திற்கு மேல் 4 x 3 x2 செமீ அளவில் சிதைந்தகாயம்.

3) நெற்றியின் வலது பகுதி 4 x 2 x 1 செமீ அளவில் சிதைந்தகாயம்.

4) தலையின் பின்பகுதியில் 4 x 2x 1 செமீ அளவில் வெட்டுக்காயம்.

5) தலையின் நடுப்பகுதி 4 x 2 x 1 செமீ அளவில் வெட்டுக்காயம்.

6) தலையின் வலது பகுதியில் 3 x 2 x 1 செமீ அளவில் சிதைந்த காயம்

7) இடது முழங்கை முட்டிப்பகுதியில் சிராய்ப்புக்காயம் காணப்பட்டது.

8) மண்டை ஓட்டின் வலது பக்க பக்கவாட்டு எலும்பு உடைந்திருந்தது.

9) மூளையில் இரத்தம் கசிந்து உறைந்து காணப்பட்டது.

உள்ளுறுப்புகளை தடய அறிவியல்துறைக்கு கருத்துரைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி இறப்பு தலையில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் மண்டை ஓட்டின் உள்புற இரத்தக்கசிவினால் ஏற்பட்டிருக்கலாம் என்று நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.13** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி தடய அறிவியல் துறையில் இருந்து வந்த கருத்துரையின்படி இறந்தவரின் உள்ளுறுப்புகளில் விஷமோ, எத்தில் ஆல்கஹாலோ காணப்படவில்லை என்று நான் வழங்கிய **இறுதி கருத்துரை அ.த.சா.ஆ.14** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. நான் பிரேத பரிசோதனை செய்ததற்கு 12 முதல் 18 மணி நேரத்திற்குள்ளாக மேற்படி இறப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கிரிக்கெட் பேட், அருவாள்கள், கத்தி, கட்டைகள் ஆகியவற்றால் ஒரு நபரை தாக்கும்போது, மேலே குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்படி காயங்களால் ஒரு நபருக்கு மரணம் ஏற்பட வாய்ப்புண்டு.இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:02 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பிரேத பரிசோதனை செய்ததற்கு எத்தனை மணி நேரம் முன்பு இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று போலிசார் விசாரணையில் போது சொல்லவில்லை என்றால் சரிதான். பிரேதம் என்ன ஆடை அணிந்திருந்தது, என்ன நிறம் கொண்ட ஆடை, ஆடையின் எந்த பகுதியில் இரத்தம் படிந்திருந்தது ஆகிய விவரங்களை பிரேத விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரேதத்தில் இருந்து அகற்றப்பட்ட உடைகளை யாரிடம் ஒப்படைத்தேன் என்று போலிசாரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தேசிய மனித உரிமைகள் ஆணைய வழிகாட்டுதல்படி, பிரேதம் அணிந்திருந்த உடைகளின் நிறம், விவரம், ஆடைகளின் எந்த பகுதிகளில் இரத்தம் படிந்திருந்தது ஆகிய விவரங்களை பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவேண்டும் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. பிரேத விசாரணையின்போது, ஆயுதங்களை என்னிடம் போலிசார் காட்டினார்களா என்றால் காட்டவில்லை. என்னை போலிசார் விசாரித்தபோது, ஆயுதங்களை என்னிடம் காட்டிவிசாரித்தார்கள். ஆனால் அவ்வாறு காட்டி விசாரித்ததாக நான் போலிசாரிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் போலிசார் காட்டிய ஆயுதங்களில் இரத்தக்கரை படிந்திருந்ததா என்றால் படிந்திருந்தது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களில் இரத்தக்கரை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று, கூர்மையான கல்லிலோ, வேறு பகுதியிலோ மோதி விழும்போது, மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. அ.த.சா.அ.14 இறுதி கருத்துரை வழங்கிய தேதி 26.11.2021 என்றால் சரிதான். உள்ளுறுப்புகளின் தடய அறிவியல்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:05 +0530

கருத்துரை யாரிடம் இருந்து வந்தது என்று அ.த.சா.ஆ.14 இல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:08 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .